பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

22 ] சென்னை—ஞாயிறு, செப்டம்பர் 8, *1946*. [ விலை. அணா. 2

## விற்பனை வரி

பம்பாயில் இயற்றப்பட்டுள்ள விற்பனை வரிச் சட்டத்தைப்பற்றி என்னிடம் அநேக கடிதங்கள் வந்திருக்கின்றன. அதை ஆட்சேபித்துக் கூறியுள்ள வாதங்களில் பல முன்பின் யோசனை இல்லாமல் கூறப்படுவனவேயாகும். ஆயினும் கூறப்பட்ட குறைகளில் சிலவற்றை நிதி மந்திரிக்கு அனுப்பி வைத்தேன். திரு. வைகுண்டபாய் மேத்தா எதுவும் ஜாக்கிரதையாகக் கவனித்துச் செய்யக்கூடிய மந்திரியாவார். அவர் ஆட்சேபணைகள் அனைத்திற்கும் பதில் எழுதி அனுப்பி இருக்கிறார்.

இந்தச் சட்டம் பொதுஜன சர்க்கார் ஏற்படுவதற்கு முன்னதாகவேவகுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மந்திரி சபை அதில் சில சாரமானமாறுதல்களைச் செய்திருக்கிறது. இப்பொழுதுள்ள சர்க்கார் பொதுஜன அபிப்பிராயத்தை லக்ஷியம் செய்யாமல் தன் இஷ்டம்போல் நடக்கிறதென்றும் விற்பனை வரி வசூலிக்கப்பட்டு வருகிறதென்றும் எண்ணும்படியாகக் குறை கூறுகிறவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவன்று. இன்னும் வரி வசூலிக்க ஆரம்பிக்கவில்லை. அக்டோபர் மாதம் முதல் தேதி வரை வசூலிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவசியம் ஏற்பட்டால் அதற்குப் பின்னாலும்கூட நிறுத்திவைக்கலாம். அத்துடன் அவசியமாக உபயோகிக்க வேண்டிய பல பொருள்களுக்கு வரி விலக்குச் செய்திருக்கிறார்கள். சர்க்கார் பொது ஜனங்களுடைய ஆட்சேபணைகளையும் அசௌகரியத்தையும் போதுமான அளவு கவனித்தே காரியங்களைச் செய்கிறார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது. விற்பனை வரி விதிக்கவே கூடாது என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதை அறிவேன். இந்த அபிப்பிராயத்திற்குச் சாதகமாக எத்தனையோ வாதங்கள் கூறுகிறார்கள். ஆனால் காரியாம்சத்திற்கு உபயோகமில்லாத ஆட்சேபணைகளுக்குச் செவிகொடுத்துக்கொண்டிருந்தால் எந்தச் சர்க்காரும் நடைபெற முடியாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அஸ்திவாரமான பிரச்னைகளை கிளப்பாமலிருப்பதே அறிவுடைமையாகும்.

விற்பனை வரி பல மாகாணங்களில் அமுலில் இருந்து வருகிறது. எந்த வரியையும் சரியா தப்பா என்று அறிவதற்குள்ள உறைகல், அது ஏழைகளுக்குக் கஷ்டம் தருமா தராதா என்று அறிவதுதான். ஏழைகளுக்கு கஷ்டம் தராத வரிதான் சரியான வரி. அத்துடன், வசூலிக்கும் பணம் பொது ஜனங்களுடைய நன்மைக்காகவே உபயோகப்படுத்தும்படியும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பொதுஜன ஆதரவுள்ள மந்திரிசபை, சட்டசபைகளுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும். அதனால் அது அவைகளுடைய சம்மதமில்லாமல் எதுவும் செய்ய முடியாது. ஜனப் பிரதிநிதிகளுடைய சட்டசபையிலுள்ள ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பரும் தம்முடைய தொகுதியிலுள்ள வோட்டர்களுக்குப் பொறுப்புடையவர் ஆவார். ஆதலால் பொதுஜனங்களுக்குப் பிரதிநிதியாயுள்ள ஓட்டர் எவரும் தாம் சிருஷ்டித்த சர்க்காரை குறை கூறுவதற்கு முன்னால் தாம் கூறுவது சரியா தப்பா என்று நன்றாக சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர் ஆவார். அத்துடன் நம்முடைய ஜனங்களின் ஒரு கெட்ட வழக்கத்தையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஜனங்களுக்கு எந்த வரியுமே பிடிக்கிறதில்லை. நல்ல சர்க்காரா யிருந்தால் வரி கொடுப்பவருக்குத் தாம் கொடுத்த வரிக்குத் தக்க நன்மை கிடைத்து விடுகிறது. நகரங்களில் தண்ணீர் வரி கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும் வரிப்பணத்தைத் தனியாக ஒரு ஆளுக்குக் கொடுத்து அந்த அளவு தண்ணீரைப் பெற்றுவிட முடியாது. அப்படியிருந்தும் கூட அந்த விதமான வரிகளையும் ஜனங்கள் வெறுக்கவே செய்கிறார்கள். இந்தத் தண்ணீர் வரி எப்படி ஜனங்களுக்கு நன்மையானது என்று நான் எளிதாகக்காட்டியதுபோல எல்லா வரிகளையும்பற்றிக் காட்டுவது கஷ்டமான காரியம் என்பது உண்மைதான். ஆனால் ஜன சமூகம் வளர்ந்து கொண்டுபோகும் ரீதியிலும் சர்க்கார் நாளுக்கு நாள் அதிகமான சேவைகளைச் செய்து கொண்டுபோகும் ரீதியிலும் ஒவ்வொரு வரியினாலும் இன்ன நன்மை இவ்வளவு நன்மை என்று விளக்கிச் சொல்வது கஷ்டமான காரியம். ஆயினும் வரிகளெல்லாம் ஜனங்களுடைய நன்மைக்காகவே ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

அப்படிக்கில்லாவிட்டால் வரிகளெல்லாம் பொது ஜன சம்மதத்தின் பேரில் விதிக்கப்படுவதாக எப்படிக் கூறமுடியும்? நாம் அன்னிய ஆட்சிக்கு அடிமையாக இருப்பதால் இப்பொழுதுள்ள சர்க்கார் ஜனங்களுக்குப் பரிபூர்ணமான அளவு பொறுப்பு வாய்ந்ததாக இருக்கவில்லை. ஆனால் இன்றைக்கு மாகாணங்களில் நடக்கும் சர்க்கார் அதிகமான அளவு பொது ஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகவே இருக்கிறது. அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் விற்பனை வரியை மதிப்பிடவேண்டும்.

புது டில்லி — 29-8-46 — மோ. க. காந்தி.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## கோவா

கோவா சர்க்கார் பிரசார இலாகாத் தலைவர் ஹரிஜன் ஆசிரியருக்குக் கீழ்க்கண்ட கடிதத்தை எழுதி இருக்கிறார் :—

“ திரு. காந்தி 18-ந் தேதி வெளியான ஹரிஜன் பத்திரிகையில் கோவாவைப்பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதி இருக்கிறார். அதில் போர்த்துகீஸிய சர்க்கார் பிரஞ்சு

சர்க்கார் நடப்பதுபோல் நடக்கவில்லை என்று சுட்டிக்காட்டி யிருக்கிறார்.

அது சம்பந்தமாக, தங்களுக்கும் தங்கள் மூலமாக பொது ஜனங்களுக்கும் தெரியும் பொருட்டு கீழ்க்கண்ட விஷயங்களைத் தெரிவிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

பிரஞ்சு இந்தியாவுடன் போர்த்துகீஸிய இந்தியாவை ஒப்பிடுவது போன்ற அஸம்பாவிதமான காரியம் வேறு எதுவும் கிடையாது. இரண்டு சர்க்கார்களுடைய நோக்கமும் நிர்வாக முறையும் லக்ஷியமும் முற்றிலும் மாறுபட்டவைகளேயாகும். இந்தியாவில் பிரான்ஸ் ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்கள் 1816-ம் வருஷத்தில்தான் பிரஞ்சு சாம்ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டனவாகும். அதன் பிறகுகூட அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் போர்த்துகீஸிய ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்களோ போர்த்துகல் தேசமாகிய தாய் நாட்டோடு நானூறு வருஷங்களாக ஒரே ஐக்கியமாக இருந்து வாழ்ந்து வருகின்றன.

இந்தியா சுதந்திரமடையப் போவதாகச் சொல்கிறார்கள். அது இனிமேல்தான் தெரிய வேண்டிய விஷயம்.

பிரஞ்சு இந்தியாவிலுள்ள ஜனங்கள் சுதந்திர இந்தியாவிலுள்ள ஜனங்களோடு ஒன்று சேர்ந்து வாழப் பிரியப்படலாம். ஆனால் அந்த மாதிரி போர்த்துகீஸிய இந்தியாவில் நடைபெறாது. அங்குள்ள ஜனங்கள் எல்லோரும் தங்களுடைய க்ஷேமத்தைக் கவனித்துவரும் போர்த்துகீஸிய ஆட்சியின்கீழ் இதுவரை இருந்ததுபோல இனிமேலும் இருந்துவரவே விரும்புகிறார்கள். கோவா, செல்வம், ஒழுக்கம், கல்வி முதலிய சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்திருப்பதற்குக் காரணம் போர்த்துகீஸிய ஆட்சிதான். அப்படி அது அதிகமான அளவு முன்னேற்றமடைந்திருப்பதனால்தான் போர்த்துகல் தேசத்தார் தங்கள் குடியேற்ற நாட்டுக்கொள்கையைப்பற்றிப் பெருமை பேசிக்கொள்கிறார்கள். கோவாவும் தாய்நாட்டில் ஒரு பிரிக்கமுடியாத அங்கமாக இருந்துவருகிறது.

இவைகளெல்லாம் சரித்திர ஆதாரமுள்ள உண்மைகள். இவைகளைக்கொண்டு தங்கள் பத்திரிகையில் காணப்படும் பிழைகளைத் திருத்திக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.''

இந்தக் கடிதத்தை வாசிக்க ரொம்ப வருத்தமாயிருக்கிறது. ஒப்பிட்டுப் பார்ப்பது உபயோகமற்ற காரியம் என்று ஆங்கில நாட்டில் வழங்கும் ஒரு பழமொழிக்கு இது ஒரு நல்ல உதாரணம். உண்மையில் பிரஞ்சு ஏகாதிபத்தியத்துக்கும் போர்த்துகீஸிய ஏகாதிபத்தியத்துக்கும் யாதொரு வித்தியாஸமும் கிடையாது. ஏகாதிபத்தியத்தின் கைகள் எப்பொழுதும் ரத்தக் கறையுடையனவேயாகும். அரசர்களுக்குள் நல்லவர் என்று பெயர் பெற்ற அசோகர் எப்படி ஏகாதிபத்தியக் கொள்கையைத் துறந்தாரோ அப்படி ஏகாதிபத்திய ராஜ்யங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகத் துறந்துவிடுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு துன்பப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும் இந்த உலகத்திற்கு நல்லது. பிரான்ஸ்தேசம் பாராட்டத்தக்க விதத்தில் காரியங்கள் செய்தால் அதற்காகப் பாராட்டவேண்டியதுதான். அதில் தவறொன்றுமில்லை. பிரஞ்சு இந்திய கவர்னர் சொல்லி யிருப்பதாகப் பத்திரிகைகளில் காணப்படுவது உண்மையாயிருக்குமானால் அதைப் பாராட்டுவதில் தவறில்லை. தவிரவும் கோவா சர்க்கார் பிரசார இலாகாத் தலைவர் கோவாவிலுள்ள இந்தியருக்குப் போர்த்துகல் தேசத்தைத் தாய்நாடாகக் கூறுவது நகைப்புக்கிடமாய் இருக்கிறது. எனக்கு எப்படி இந்தியா தாய்நாடாக இருக்கிறதோ அப்படியே அவர்களுக்கும் இந்தியாவே தாய்நாடாகும். கோவா பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் புறம்பாக இருந்தாலும் இந்தியா என்னும் தேசத்தில் அதுவும் ஒரு பகுதியேயாகும். போர்த்துகல் தேசத்தாருக்கும் கோவாவிலுள்ள இந்தியருக்கும் பொதுவாக உள்ள காரியம் எதுவும் கிடையாது. நான் திரு. புருஷோத்தம் காக்கோட்காரைப்பற்றி எழுதியுள்ளதைப் பற்றியும் மறுப்புரை எழுதியிருக்கிறார்கள். கோவாவிலுள்ள போர்த்துகீஸிய அதிகாரிகள் மறுத்துரைத்தாலும் நான் கூறியதைத் தவறென்று சொல்லமுடியாது. அவருடைய மனைவியார் 24-8-46-ல் எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

“கோவா தேசிய காங்கிரஸின் காரியதரிசியான திரு. புருஷோத்தம் காக்கோட்கார் 9-8-46-ல் ஒரு நண்பரோடு பேசிக்கொண்டிருந்த சமயத்தில் போர்த்துகீசிய அதிகாரிகளால் கைதியாக்கப்பட்டார். 10-ம் தேதி நோவா கோவா என்று சொல்லப்படும் பஞ்சிம் என்ற ஊருக்குக் கொண்டு போகப்பட்டார். 11-ம் தேதியும் 12-ம் தேதியும் அவருக்கு அரைச் சாப்பாடே கொடுத்தார்கள். அதிகாரிகள் வேண்டுமென்றே உணவைக் குறைத்துக் கொடுப்பதாக அறிந்ததும் அவர் 13-ம் தேதி உண்ணாவிரதம் ஆரம்பித்தார். இன்று 24-ம் தேதி. தமக்கும் இதர கைதிகளுக்கும் போதுமான அளவு உணவு கொடுக்க வேண்டுமென்று அவர் எழுதி அனுப்பிய வேண்டுகோளைப் போர்த்துகீஸிய அரசாங்கத்தார் இன்னும் கவனியாமலே இருந்து வருகிறார்கள். அவர்கள் இன்னும் தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. அவர் இன்னும் உண்ணாவிரதம் இருந்து கொண்டேதான் இருக்கிறார்.''

உண்மையான விஷயம் என்ன என்று தெரிந்து கொள்வதற்காகக் கைதி காக்கோட்காரைக் கண்டு பேச ஹரிஜன் பத்திரிகையின் பிரதிநிதி ஒருவருக்குப் போர்த்துகீஸிய அரசாங்கத்தார் அனுமதி தருவார்களா என்று நான் கேட்கிறேன்.

புதுடில்லி — 29-8-46 — மோ. க. காந்தி

## உண்ணாவிரதத்தால் மிச்சப்படுத்தக் கூடியது

இந்தோநேஷியா நமக்கு 1120 லட்சம் ராத்தல் அரிசி கொடுப்பதாக வாக்களித்திருக்கிறது. அதைக் கொண்டு ஒரு ஆளுக்கு 1 ராத்தல் வீதம் 1120 லட்சம் பேருக்கு 1 நாளைக்கு உணவு அளிக்க முடியும். அதனால் 1120 லட்சம்பேர் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தால் 1120 லட்சம் ராத்தல் அரிசி மிச்சமாகும். நம்முடைய நாட்டில் உடம்பு வேலை செய்பவர்களும் குழந்தைகளும் போக 16 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்கள் சனிக்கிழமை தோறும் மாலையில் உணவு உண்ணாமல் இருந்தால் ஒரு வருஷத்தில் சுமார் 10 லட்சம் டன் தானியங்கள் மிச்சமாகும்.

இந்த அளவு தானியந்தான் இப்பொழுது நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் தானியக் குறைவின் அளவாகும். ஆதலால் இந்தமாதிரி சனிக்கிழமைதோறும் மாலையில் உண்ணாதிருந்தால் சகல ஜனங்களுக்கும் சரிசமானமாகத் தானியங்கள் கிடைக்க வழி உண்டாகும்.

இந்தமாதிரிச் செய்தால் உணவு உண்டாக்கும் செலவும் மிச்சமாகும். ஆரோக்கியமும் அதிகரிக்கும். இந்தோநேஷியாவை எதிர்பார்க்க வேண்டியதில்லை.

## இங்கிலாந்தில் பால் உபயோகிக்கும் முறை

நம் நாட்டில் சராசரி வயது 30. இங்கிலாந்தில் 60. நம் நாட்டில் குழந்தை மரணவிகிதம் 1000 க்கு 150, இங்கிலாந்தில் 50. நம் நாட்டில் மரண விகிதம் 24, இங்கிலாந்தில் 12. இந்த வித்தியாசத்திற்கு உள்ள காரணங்களில் உணவு விஷயமும் ஒன்று. இதில் ஆச்சர்யம் இல்லை. யுத்தத்திற்கு முன் இந்தியாவில் சராசரி வருமானம் 65 ரூ. இங்கிலாந்திலோ 1300 ரூ. அதாவது 20 மடங்கு அதிகம். இந்தியாவில் சராசரி தினசரி ஒவ்வொருவரும் குடிக்கும் பால் 7 அவுன்ஸ். இங்கிலாந்திலோ 30 அவுன்ஸ். யுத்தம் நடந்தபோதிலும் குடிக்கும் பாலானது அங்கே 28 சதமானம் அதிகரித்திருக்கிறது.

அங்கே பாலை அதிகமாகவும் குடிக்கிறார்கள். அதிக சுத்தமாகவும் வைத்துக் கொள்கிறார்கள். அது விஷயத்தை லே என்பவர் எழுதியுள்ள பிரஜாபத்தியம் என்ற நூலில் காணலாம். அதிலிருந்து ஒரு பகுதி வருமாறு :—

“பால் கறக்கவரும் பசுக்களை கான்கிரீட் தளத்தில் நிறுத்தி வைக்கிறார்கள். அதனால் பாலில் தூசி சேர முடியாது. அந்த இடத்திற்கு பசு ஒரு வழியாக வரும். அங்கிருந்து பாலை வேறு வழியாகக் கொண்டுபோவார்கள். அதனாலும் தூசி பாலில் சேராது! பால் கறக்குமிடம் சுத்தமாயிருக்கும். பெரிய ஜன்னல்கள் உண்டு. பால் கறககுமுன் மடியை நன்றாகக் கழுவுவார்கள். ஜலம் ஜலதாரையில் போகும். கறப்பவர் சுத்தமான உடையை உடுத்திக் கொள்வார். ஆஸ்பத்திரி நர்ஸைப்போல் கையைக் கழுவிக் கொள்வார். பாலைக் கறந்து சுவரில் உயரமாக மாட்டி யிருக்கும் பாத்திரத்தில் ஏணி வைத்து ஏறி ஊற்றிவைப்பார். அந்தப் பாத்திரத்திலிருந்து பால் வடிகட்டப்பட்டு சிறு குழாய் மூலமாக பால் அறைக்கு வந்து சேரும். அங்கே அது பனிக்கட்டியால் குளிர்விக்கப் பட்டு மறுபடியும் வடிகட்டப்பட்டு ஒரு பெரிய பாத்திரத்தில் வந்து விழும். அதன் பின் அதை உபயோகிப்பார்கள்.

வி. ஜி. டி.

## தரிசாகக் கிடக்கும் நிலங்கள்

திரு. வி. என். கனேல்கார் பம்பாயிலிருந்து எழுதுகிறார் :—

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்காகத் தங்களாலியன்றதெல்லாம் செய்ய முயன்று கொண்டிருக்கும் நமது மந்திரிகள், இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் இந்திய விவசாய விஷயங்களைப் பற்றித் தரும் புள்ளி விவரங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அதிகமாக உணவை உற்பத்தி செய்க என்ற இயக்கம் நடந்தும், நிலைமையில் அதிகமான மாறுதல் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. ஆதலால் 1941 ம் வருஷத்துப் புள்ளி விவரங்களை இப்பொழுதுள்ள நிலைமையைக் கூறுவதாகவே கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பயிர் செய்த நிலம் | 21,32,90,000 | ஏக்கர். |
| பயிர் செய்யாத நிலம் | 4,71,50,000 | ஏக்கர். |

ஆகவே பயிர் செய்யாமல் கிடக்கும் நிலம் பயிர் செய்த நிலத்தில் 22 சதமானமாகும்.

அப்படிப் பயிராகாமல் தரிசாகக் கிடக்கும் நிலத்தின் சதமானம் முக்கியமான மாகாணங்களில் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 31 | பம்பாய் | 17 |
| ஒரிஸ்ஸா | 30 | அஸ்ஸாம் | 30 |
| வங்காளம் | 18 | மத்தியமாகாணம் | 14 |
| பீகார் | 38 | ஐக்யமாகாணம் | 8 |

போதுமான உரமும் ஜலமும் கிடைத்தால் எந்த நிலத்தையும் தரிசாகப் போடவேண்டிய அவசியமில்லை என்று விவசாய நிபுணர்கள் கூறுகிறார்கள். அதனால்தான் ஐக்ய மாகாணத்தில் அதிகமான நிலம் தரிசாகக் கிடக்கவில்லை.

பயிர் செய்யக்கூடிய நிலத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் :—

| | | |
|---|---|---|
| வங்காளம் | 86,2,788 | ஏக்கர். |
| பம்பாய் | 320,7,01 | ,, |
| ம. மாகாணம் | 51,94,728 | ,, |
| பஞ்சாப் | 42,32,286 | ,, |
| மொத்தம் | 1,04,97,103 | |

ஸர் விஜயராகவச்சாரியார் தமது “சட்டமும் அதன் பிரச்னைகளும்” என்ற நூலில் எழுதுகிறார் :—

“பாக்கி 870 லட்சம் ஏக்கர்களைச் சர்க்கார் ‘சாகுபடி செய்யாத நிலம்’ என்று கணக்கிடுகிறார்கள். ஆனால் உணவு விஷயமாகச் சர்ச்சை செய்வோர் இந்த நிலத்தைச் சாகுபடி செய்யலாம் என்றே எண்ணுகிறார்கள். ஆயினும் எவ்வளவு தூரம் அப்படிச் செய்யலாம் என்று சர்க்கார் சரியானபடி ஆராயக் காணோம். ஆனால் மாகாண சர்க்கார்கள் இந்த நிலத்தில் 100 லட்சம் ஏக்கர்களைச் சாகுபடி செய்யலாம் என்றே குறிப்பிடுகிறார்கள்”

கீழ்கண்ட புள்ளி விவரங்களும் கவனிக்கப்பட வேண்டியவை :—

| | | |
|---|---|---|
| சணல் பயிராகும் நிலம் | 29,52,000 | ஏக்கர் |
| தேயிலை காப்பி | 8,41,000 | ,, |
| புகையிலை | 11,96,000 | ,, |
| கஞ்சா முதலியன | 2,12,000 | ,, |
| மொத்தம் | 52,01,000 | ,, |

உண்டாகும் சணலில் பெரும்பாகம் அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. தேயிலைத் தோட்ட முதலாளிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமியை இன்னும் சாகுபடி செய்யாமல் தரிசாகவே போட்டிருக்கிறார்கள். உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் புகையிலையும் கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களும் பயிரிடும் நிலத்தை உணவுப் பொருள்களைப் பயிர் செய்வதற்காக உபயோகித்தல் வேண்டும்.

இந்த விஷயத்தை மந்திரி சபைகள் உடனடியாகக் கவனித்து வேண்டுவன செய்தல் வேண்டும். அவர்கள் தேசிய சர்க்கார் செய்யும் வரைக் காத்திருக்க வேண்டியதில்லை.

சேவா கிராமம் — பியாரேலால்.

---

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

வருஷ சந்தா தபால் செலவு உள்பட ரூ. 7 0 0
ஆறுமாத சந்தா ,, ,, ரூ. 3 8 0

**தமிழ் ஹரிஜன்,**

தியாகராயநகர் :: சென்னை.

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

செப்டம்பர் 8 ஞாயிறு 1946

## விஷமாற்று மருந்து

சமீபத்தில் கல்கத்தாவில் துரதிர்ஷ்ட வசமாகவும் கேவலமாகவும் நடந்த சம்பவங்களைக் கண்முன் தோன்றுவதுபோல் வர்ணித்துவிட்டு ஒரு நிருபர் கேட்கிறார் :—

“அத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் செய்யவேண்டிய கடமையாது? அத்தகைய நெருக்கடியான சமயங்களில் சாதாரணமான காங்கிரஸ் ஊழியர்களுக்குக் காங்கிரஸ் மகா சபை தெளிவான யோசனைகள் எதுவும் கூறக்காணோம். வெகு தூரத்திலிருந்து கொண்டு அஹிம்சையைப்பற்றி உபதேசங்கள் செய்வது கொஞ்சமும் பிரயோஜனப்படாது. அஹிம்சை முறையில் எதிர்த்தால் சொத்தெல்லாம் அழிந்துபோகும். ஹிந்துக்கள் எல்லோரும் கொல்லப்பட்டுப் போவார்கள்.”

காங்கிரஸ் காரியக்கமிட்டியார் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்த தங்கள் தீர்மானத்தின் இறுதி வாக்கியத்தில் வெகு தெளிவாக காங்கிரஸ்காரர்கள் செய்ய வேண்டியதைக் கூறியிருக்கிறார்கள். சகோதரர்கள் ஒருவரையொருவர் கொல்லுவதென்பது ஒருநாளும் பலாத்காரத்தாலும் பயமுறுத்துவதாலும் குறைய மாட்டாது. ஒருவரையொருவர் அறிந்துகொள்வதாலும் நட்பு முறையில் விவாதிப்பதாலும் அவசியமானால் இருதிறத்தாரும் ஒப்புக்கொள்ளும் மத்தியஸ்தத்தாலுமே குறையும் என்று கூறியிருக்கிறார்கள். இந்த வாக்கியத்தின் உண்மையை அறிந்துகொள்ளுவதற்கு அஹிம்சையை ஒரு மதக்கொள்கையாக ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஹிந்துக்கள், வேண்டுமென்று தியாகம் செய்வதற்குவேண்டிய மனோ தைரியத்துடன் ஒருவர் பாக்கியில்லாமல் இறக்கும்வரை அஹிம்சையாக எதிர்த்திருந்தால் அதன் மூலம் ஹிந்துமதமும் இந்தியாவும் விடுதலையடைந்திருக்கும். இஸ்லாம்மதம் இந்த தேசத்தில் தூய்மை பெற்றிருக்கும்.

ஆனால் அப்படி நடைபெறாமல் மூன்றாவது கட்சியே, ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பரஸ்பரம் காட்டிக் கொண்ட காட்டுமிராண்டித் தனத்தை அடக்குவதற்குத் தலையிடவேண்டியதாக ஆகிவிட்டது. இந்தத் தலையீட்டால் இந்துக்களும் லாபமடையவில்லை. முஸ்லீம்களும் லாபமடைய வில்லை. கல்கத்தா விஷமானது இந்தியா முழுவதும் பரவவும், பிரிட்டிஷ் வெடி மருந்து ஒருவரையொருவர் குத்திக்கொல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும் செய்யுமானால் பிரிட்டிஷ் ஆதிக்கந்தான் இன்னும் வெகு காலத்துக்கு இந்த நாட்டில் இருந்துகொண்டிருக்கும். எவ்வளவு காலத்துக்கு இருந்துகொண்டிருக்குமென்பது எவ்வளவு காலத்துக்கு இவர்கள் புத்தியிழந்திருப்பார்கள் என்பதைப் பொறுத்ததாகும். இருவரும் அன்னியர் உதவியில்லாமல் சண்டைசெய்து சோர்ந்துபோனால் அப்பொழுது அவர்களுக்கு புத்தி வரும். அல்லது இரண்டு கட்சியாரில் ஒரு கட்சியார் எவ்வளவு அதிகமான துன்பம் வந்தாலும் பலாத்காரத்தில் இறங்காமல் இருப்பார்களானால் அப்பொழுதும் அவர்களுக்குப் புத்தி உண்டாகும். இப்பொழுது தற்காலத்தில் உபயோகிக்கப்படும் போர்க் கருவிகள் கிடையாதிருப்பதாலும் அவற்றை உபயோகிக்கத் தெரியாததாலும் எந்தக் கட்சியாரும் வெற்றிகரமாகச் சண்டை போட்டுக் கொள்ளமுடியாது. அஹிம்சை அனுஷ்டானத்துக்குப் புறத்தில் நடத்த வேண்டிய பயிற்சி எதுவும் தேவையில்லை. அதற்கு வேண்டியதெல்லாம் பழிக்குப்பழி வாங்காமல் இறக்கத் தயாராக உள்ள மனோதைரியம் ஒன்றுதான். இப்படிச் சொல்லுவதைக் கொண்டு அஹிம்சையைப் பற்றி வேதாந்தப் பிரசங்கம் செய்வதாக எண்ண வேண்டாம். அறிவால் அறியக்கூடிய விஷயத்தையே கூறுகிறேன். எங்கும் அனுஷ்டிக்கக்கூடிய ஒரு நிரந்தரமான விதியையே சொல்லுகிறேன். இந்த விதியினிடத்தில் அசையாத நம்பிக்கை மட்டும் இருக்குமானால் எவ்வளவு தூரம் ஹிம்சையில் இறங்கும்படி தூண்டப்பட்டாலும் பொறுமையாக இருக்கமுடியும். இதைத் தான் நான் வீரர்களுடைய அஹிம்சை என்று சொல்லி வருகிறேன்.

ஆனால் துரதிஷ்ட வசமாக நாம் இன்னும் இந்த வீரர்களுடைய அஹிம்சையைச் சமூக அளவில் அனுஷ்டிக்க முடியாதவர்களாய் இருந்து வருகிறோம். பெரிய கூட்டத்தார் அனுஷ்டிக்க முடியாவிட்டாலும் சிறிய கூட்டத்தாராவது அனுஷ்டிக்க முடியுமோ என்றால் அதுவும் முடியாது என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். அபூர்வமான திறமை வாய்ந்த சிலர் மட்டுமேதான் அனுஷ்டிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சிலர் மட்டுமேதான் அனுஷ்டிக்க முடியும் என்றால் அந்த அஹிம்சா தர்மத்தால் மனித ஜாதிக்கு எவ்வித பிரயோஜனமுமில்லை என்று கூறுவேன்.

அது எப்படியானாலுமாகட்டும். ஜனங்கள் வீரர்களுடைய அஹிம்சையைஅனுஷ்டிக்கத் தயாராக இல்லாவிட்டால் தற்காப்புக்காக பலாத்காரத்தை உபயோகிக்கத் தயாராக இருக்கவேண்டும் என்பதில் சந்தேகம் கிடையாது. இதில் எவ்வித ஒளிப்பும் மறைப்பும் இருக்க முடியாது. தற்காப்புக்குமட்டுமே பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டும். அப்பொழுதும் கூட கோழைத்தனமாகவோ குரூரமாகவோ நடந்து கொள்ளக்கூடாது. ஆதலால் ஒருபொழுதும் ரகசியமாகக் காரியம் செய்யக்கூடாது. முதுகில் குத்திவிட்டு தப்பிஓடுவதுரகசியமாய்ச் செய்வதாகும். அது கூடாது. நமக்கு ஆயுதமும் இல்லை, ஆயுதப் பயிற்சியுமில்லை என்பதை நான் மறக்கவில்லை. அந்த நிலைமையில் இருப்பது நல்லதா என்பதைப்பற்றி அப்பிராயங்கள் பல விதமாகக் கூறுவார்கள். ஆனால் தற்காப்புக்காக ஆயுதங்களை உபயோகிப்பதற்கு யாருக்கும் பயிற்சி வேண்டியதில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்கு வேண்டியதெல்லாம் பலமான புஜங்களும் அதைவிட பலமான மனோதைரியமும் தான்.

பிறருக்குத் தீமை செய்தல் பலாத்காரம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பிறருக்குத் தீமை செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டும் கோழைத்தனத்தால் தற்காப்பு செய்துகொள்ள பிரியப்படாதிருப்பதும் பலாத்காரம் தான். இது முந்தியதைவிடக் கூட அதிகக் கெட்டதாகும்.

அப்படியானால் தலைவர்கள் செய்ய வேண்டியது யாது? புது மந்திரிகள் செய்ய வேண்டியது யாது? அவர்கள் வகுப்பு ஒற்றுமை உண்டாக்குவதற்கே எப்பொழுதும் முயலவேண்டும். ஆனால் அதற்காக யாரையும் ஒருபொழுதும் பயமுறுத்தலாகாது. நான் முஸ்லீமையோ ஹிந்து அல்லாதவரையோ என் உடன்பிறந்த சகோதரராக பாவிப்பது ஏனென்றால் அவரைத் திருப்திப்படுத்துவதற்காக அல்ல. நான் எந்தப் பாரததேவியிடம் பிறந்திருக்கிறேனோ அதே

பாரததேவியிடம் அவரும் பிறந்திருக்கிறார் என்பதற்காகவே. அவர் என்னைச் சகோதரராக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர் என்னிடம் துவேஷம் காட்டினாலும் அவர் என்னுடைய சகோதரரே. அவர் என்னை வெறுத்தாலும் நான் அவரை என்னைச் சகோதரராக எண்ணும்படி செய்யவே முயல வேண்டும். புது மந்திரிகள் பிரிட்டிஷ் துருப்புகளையும் பிரிட்டிஷ் துருப்புகளிடம் பயிற்சி பெற்ற போலீஸ் படைகளையும் ஒருபொழுதும் உபயோகிப்பதில்லை என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் நம்முடைய பகைவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் நம்முடைய ஜனங்களுக்கு உதவி செய்வதற்காக உபயோகிக்கப்படாமல் அவர்களை அன்னிய நுகத்தடியின்கீழ் அடக்கி வைப்பதற்கே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிர்மாண காரியங்களுக்கு உபயோகப்படுத்த முடியும். அதனால் இப்பொழுது அவர்களை அந்தக் காரியங்களுக்கு உபயோகப்படுத்தவேண்டும் அதிலும் ராணுவத்தார் அத்தகையவேலைக்கு விசேஷமான யோக்கியதை உடையவர்களாவார்கள். ஒரு கண நேரத்தில் கான்வஸ் துணியைக் கொண்டு நகரங்கள் அமைத்து விடப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். சுத்தமான ஜலம் சேகரிப்பது எப்படி ? ஜலத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவது எப்படி ? சரியான முறையில் சுகாதார ஏற்பாடுகள் செய்வதெப்படி என்ற விஷயங்கள் அவர்களுக்குத் தெரியும். எப்படிக் கொல்வது, எப்படிக் கொல்லப்படுவது என்ற விஷயங்களும் அவர்களுக்குத் தெரியும்தான். அவர்களுடைய வேலைகளில் இந்தப் பகுதியைத்தான் பொதுஜனங்கள் அறிவார்கள். ஆனால் இதுவன்று அவர்களுடைய வேலையில் சாரமான சாரமான பாகம். அந்த பாகத்தைத் தான்நாம் போற்றவேண்டும், விளம்பரப்படுத்தவேண்டும், உபயோகப்படுத்தவேண்டும். மிருகத்தனமான பாகம் மனிதத்தன்மை யற்றது. மற்ற பாகம் மனிதத் தன்மை உடையது, சுத்தமானது. அதைக் கொண்டு நாம் நம்முடைய போர்வீரர்களை மனிதத் தன்மையுடையவர்களாகச் செய்யவேண்டும். அந்த முயற்சி, செய்யத் தகுந்ததாகும். ஆனால் பட்டாளமென்றால் ஒரு பிரேமையோ ஒரு பயமோ அடையாதவர்கள்தான் அந்த மாதிரி உபயோகப்படுத்தமுடியும். மனத்திலோ செயலிலோ பழி வாங்காமல் உயிர் துறப்பதற்கு வேண்டிய மனோதைரியம் உண்டானால்தான் இது சாத்தியமாகும்,

புது டில்லி, – 2-9-46 – மோ. க. காந்தி

## காந்தியடிகளின் ஆத்ம சோதனைசாலை

பூலோகத்தில் ஏற்படுத்த விரும்பும் ஸொர்க்கத்தை ஆங்கிலத்தில் யுட்டோப்பியா என்று கூறுவார்கள். அப்படி வகுக்கும் யுட்டோப்பியாக்கள் வகுக்கிறவர்களுக்கே வினையாய் முடியும். ஆங்கில ஆசிரியர் ஸ்விப்ட் என்பவர் ஒரு யுட்டோப்பியா வகுத்தார். அந்த யுட்டோப்பியாவில் தத்துவ சாஸ்திரிகளும், விஞ்ஞானிகளும், கணித சாஸ்திரிகளும் காரியங்களை எல்லாம் குழம்பச் செய்து விட்டார்கள். உபயோகமான காரியங்களைச் செய்யாமல் ஏதேதோ செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். விஞ்ஞானிகள் வெள்ளரிக் காயிலிருந்து வெயில் ஒளியைத் தயாரிக்கவும் பதரைக் கொண்டு பயிர் செய்யவும் முயற்சி செய்தார்கள். தத்துவ சாஸ்திரிகள் தத்துவ முறைகளைத் தாமாகத் தயாரிக்கக் கூடிய மெஷின்களைக் கண்டு பிடிப்பதில் தங்கள் கால முழுவதையும் செலவழித்தார்கள். கணித சாஸ்திரிகள் கிரகங்கள் எப்படி ஓடுகின்றன, உலகம் எப்பொழுது அழிந்து போகும், என்பனபோன்ற விஷயங்களைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த விதமாக அவருடைய பூலோக ஸ்வர்க்கத்தில் அறிஞர்கள் ஈடுபட்டிருந்ததால் அங்கே ஒரு சுவர் கூட சாயாமல் நிமிர்ந்து நிற்கவில்லை.

காந்தியடிகள் அத்தகைய கற்பனை பூலோக ஸ்வர்க்கத்தை ஸ்ருஷ்டிக்கும் வேலையில் ஈடுபட்டவர் அல்லர். தம்முடைய ஆஸ்ரமம் ஸ்விப்ட் சிருஷ்டித்த யுட்டோப்பியா மாதிரி ஆய்விடக் கூடாதென்று உறுதிசெய்து கொண்டிருக்கிறார். அவர் மேற்கொண்டுள்ள வேலை எளியதன்று.

அவர் ஒரு சமயம் கூறியதாவது :—

“அரசியல் விஷயத்தை நான் பிரமாதமாகக் கருதவில்லை. அது சம்பந்தமாக எனக்கு எவ்விதக் குழப்பமும் உண்டாவதில்லை. பற்றற்ற தன்மை என்னும் கூரிய கோடரியைக் கொண்டு அரசியல் காட்டினூடே நான் எளிதில் வழி செய்து கொள்ள முடியும்.”

ஆனால் ஆச்சிரமம் அவருடைய சக்தியை எல்லாம் உறிஞ்சிவிடுகிறது. எப்படிப்பட்டவரையும் கலங்கச் செய்துவிடும்படியான பிரச்னைகள் எழுகின்றன. ஆயினும் அது அவருக்குக் கவர்ச்சி யுடையதாகவே இருந்து வருகிறது. மற்றொரு சமயம் அவர் சொன்னார் :—

“என்ன காரணமென்று தெரியவில்லை. எந்த ஸ்தாபனத்தை நான் தொட்டாலும் அதை இறுதியில் நான் ஒரு ஆச்சிரமமாகவே ஆக்கிவிடுகிறேன். எனக்கு அதைத் தவிர வேறொன்றும் தெரியாதுபோலிருக்கிறது.”

இதற்குக் காரணம் கண்டு பிடிப்பது கஷ்டமான காரியமில்லை. அவர் கூறும் உண்மையும் அஹிம்சையும் ஜன சமூகத்தைவிட்டுத் தனியாக உட்கார்ந்து அனுஷ்டிக்க வேண்டிய அறங்களல்ல. அவை மனித ஜாதி தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கவேண்டிய அறங்களேயாகும்.

கடவுளைப் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் இடையிலும் மணம் வீசும் மலர்களிடையிலும், காண்பதாகவும் மக்களிடையே காணுததாகவும் கவிஞர் வருந்தினார். ஆனால் சத்தியம் அஹிம்ஸை ஆகியவற்றின் பக்தரான காந்தியடிகள் சத்தியம் அஹிம்ஸை என்னும் தம்முடைய கடவுளை ஸேவாகிராமத்திலுள்ள ஆசிரமத்தில் காணவிட்டால் வேறெங்கும் காணப்போவதில்லை என்று உறுதியாக நம்புகிறார். அது அவருடைய ஆத்ம சோதனைசாலை. அவர் அத்துடன் நிறுத்தவில்லை. தம்முடைய சுற்றுப்புறத்தின் தன்மையை வைத்தே தம்மை மதிக்க வேண்டுமென்று வற்புறுத்தவும் செய்கிறார்.

“நான் உண்மையையும் அஹிம்ஸையையும் அனுஷ்டிப்பது உண்மையானால் அவை என்னைச் சுற்றியுள்ளோரிடத்திலும் காணப்படவேண்டும். அப்படியானால்தான் என்னுடைய அனுஷ்டானத்திற்கு அர்த்தமுண்டு” என்று கூறுகிறார்.

அவரைச் சுற்றியுள்ளவர்கள் தாங்கள் செய்யும் செயல்கள் மூலம் அவருக்குக் கஷ்டமான புதுப்புது புதிர்கள் கொடுத்துக்கொண்டே யிருக்கிறார்கள். அவர் அவைகளை யெல்லாம் சரியாக விடுவிக்கவேண்டியவரா யிருக்கிறார்.

### ஒரு கஷ்டமான நிலைமை

நாங்கள் சில மாதங்கள் வெளியூரிலிருந்துவிட்டுச் சேவாகிராம ஆசிரமத்துக்குத் திரும்பி வந்தபொழுது ஊழியர்களில் ஒருவர் புத்திக்கோளாறு அடைந்திருந்தார். அவரை அடக்கிவைக்கமுடியவில்லை. அவர் சம்பந்தமாக ஒரு முடிவு செய்யவேண்டி யிருந்தது.

வார்தாவிலுள்ள சர்க்கார் டாக்டரிடம் கேட்டோம், அவர் அவரை ஜெயில் ஆஸ்பத்திரியில் வைத்துக் கவனித்துக்கொள்வதாய் சொன்னார். ஆகவே அவருடைய நன்மையையும் ஆசிரமத்து நன்மையையும் உத்தேசித்து அவரை ஜெயில் ஆஸ்பத்திரியில் அடைத்துவைக்க வேண்டியதாயிற்று. அப்படிச் செய்தது ஆடாத பல்லை அசைத்துப் பிடுங்குவது போலிருந்தது காந்தியடிகளுக்கு.

ஆனால் வேறு வழியில்லை. அவர் அந்த தர்ம சங்கடத்தைக் கீழ்க்கண்டவாறு ஆசிரமவாசிகளிடம் தெரிவித்தார் :—

"அவர் ஒரு நல்ல ஊழியர். சென்ற வருஷம் இந்த நோய் வந்து குணமானபின் தோட்டத்தைக் கவனித்துக்கொண்டும், ஆஸ்பத்திரிக் கணக்குகளை எழுதிக்கொண்டும் வந்தார். சுறுசுறுப்பாக வேலை செய்தார். சந்தோஷமாகவும் வேலை செய்தார். பிறகு அவருக்கு மலேரியா கண்டது ; கொய்னா மருந்து குத்தி வைத்தார்கள். மருந்து சாப்பிடுவதைவிடக் குத்தி வைத்தால் சீக்கிரம் குணம் தெரியும் ; அப்படி மருந்து குத்தி வைத்தது தான் தம்முடைய தலைக்கு ஏறிவிட்டதாகவும் அதுவே தம்முடைய புத்திக்கோளாறுக்குக் காரணமென்பதாகவும் கூறுகிறார். இன்று காலை நான் என்னுடைய அறையில் வேலைசெய்து கொண்டிருந்தபொழுது அவர் கையை ஆட்டிக்கொண்டும் கூப்பாடு போட்டுக் கொண்டும் அங்குமிங்கும் அலைந்து கொண்டும் இருப்பதைக் கண்டேன். உடனே அவரிடம் சென்று அவருடன் உலாவினேன். அவர் சாந்தமடைந்தார். ஆனால நான் அவரைவிட்டு விலகியதும் அடக்கமுடியாதவராகிவிட்டார். அவர் சில சமயங்களில் பலாத்காரத்தில் இறங்கிவிடுகிறார். யார் சொன்னாலும் கேட்பதில்லை; அதனால்தான் அவரை ஜெயிலுக்கு அனுப்பவேண்டியதாயிற்று.

இப்படி நம் ஊழியர்களில் ஒருவரை ஜெயிலுக்கு அனுப்பவேண்டியிருப்பதைநினைக்கும்போதுஎனக்கு துக்கமாயிருக்கிறது. ஆனால் நீங்கள் ராமநாமம் சகல ரோக சஞ்சீவி என்று கூறுகிறீர்களே அதைக்கொண்டு குணப்படுத்தக் கூடாதா என்று கேட்பீர்கள். என்னால் குணப்படுத்த முடியாமல் போனாலும் என்னுடைய நம்பிக்கை எப்போதும்போல் உறுதியாகவே இருந்து வருகிறது. ராமநாமம் குணப்படுத்தாதிருக்கமுடியாது. அது குணப்படுத்தவில்லை என்பது நம்மிடமுள்ள குறையையே காட்டும். அதைக்கொண்டு குணப்படுத்த முடியாமலிருப்பதற்குரிய காரணத்தை நம்மிடத்திலேயே தான் தேடிக் கண்டுகொள்ளவேண்டும்."

### அஹிம்சையும் சுத்தமும்

சுத்தமும் சுகாதாரமும் நாகரீக வாழ்விற்கு இன்றியமையாத அஸ்திவாரங்களாக இருப்பதால் ஆசிரமத்தில் அவைகளைப்பற்றி அதிகமாக கவனித்து வருகிறோம். ஆனால் அங்கே பலதரப்பட்டவர்கள் வருகிறார்கள். புதிதாக வந்த ஒருவர் அறியாமலோ அல்லது அஜாக்கிரதையாகவோ கக்கூஸைத் தவறாக உபயோகித்துவிட்டார். அது காந்தியடிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் மனவேதனையடைந்து கூறியதாவது :—

"சமூகத்தில் ஒருவர் குற்றம் செய்தால் அது எல்லோரையும் பாதிக்கிறது. ஆதலால் கக்கூஸுக்குப்போகிறவர்கள் அதைச் சுத்தமாக இருக்கும்படி பார்த்துக்கொள்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். சரியானபடி கவனித்தால் நாற்றமும் இராது, ஈயும் இராது. குழிக் கக்கூஸ் ஈ உண்டாக இடம் தரும் என்று குறைகூறுகிறார்கள். ஆனால் அப்படிக் கூறுவது தவறு. சரியானபடி கவனித்து வந்தால் குழிக் கக்கூஸுகள் வெகு சுத்தமாயிருக்கும்.

டாக்டர் பௌலர் என்பவர் பெங்களூரில் ஒரு ஹோட்டலில் தங்கி இருந்தபொழுது ஒரு புதுமாதிரியான முறையைக் கையாண்டார். அவர் கக்கூஸில் ஒரு தொட்டியை வைத்தார். அதில் விழும் மலத்தை ஒரு குழியில் கொட்டி அதன் மீது மண்ணைப்போட்டுக்கொண்டு வந்தார். கொஞ்ச காலமான பிறகு அது மண்ணோடு மண்ணாகிவிட்டது. அது சுத்தமாக இருந்தது. உரமாக விற்கப்பட்டது.

ஈ உண்டாவதைத் தடுக்க முடியாவிட்டால் தொத்து நோய்கள் கிளம்பிவிடும். ஆனாலும் நம்முடைய ஜனங்கள் அது விஷயத்தில் அசிரத்தையாயிருப்பதைக் காண வருத்தமாயிருக்கிறது.

ஈ உட்கார்ந்த உணவு உண்ணத் தகுந்ததில்லை என்று கருதி வெளியே எறிந்துவிடவேண்டும். ஆனால் நம்முடைய தேசம் ஏழையாயிருப்பதால் பெரும்பாலோர் உணவை எறிந்து விடக் கூடிய ஸ்திதியில் இல்லை. அதனால் அவர்கள் அஹிம்ஸையை அனுஷ்டிக்க விரும்பினால் எந்த விதத்திலும் ஈ உண்டாகாமல் தடுப்பது அவர்களுடைய முதற் கடமையாகும்.

சரீர சுத்தம் மனச்சுத்தத்திற்கான முதற்படியேயாகும். புறத்திலுள்ள அழுக்கைவிட அகத்திலுள்ள அழுக்கே அதிக அபாயகரமானதாகும். நாம் நூற்றுக்கு நூறு நமது சிந்தனையிலும் செய்கைகளிலும் சுத்தமாயிருக்க வேண்டும். அப்படிச் சுத்தமாயில்லாத மனிதன் மிருகத்தைவிட கேவலமானவன் ஆவான். ஏனெனில் மிருகம் ஒரு உபயோகமான பிராணி. அதனால் அது நம் அன்பிற்கும் மரியாதைக்கும் உரியதாகும். அசுத்தமான மனிதன் நல்ல சமூகத்தில் விரும்பத் தகாதவன் ஆவான்."

### கிராமச் சுகாதார பிரச்னைகள்

சேவாகிராமம் தேக சுகத்துக்கு உகந்ததாக இல்லாதிருப்பது குறித்து காந்தியடிகள் எப்பொழுதும் கவலையுள்ளவராக இருக்கிறார். அது பள்ளமான பூமியிலிருக்கிறது. அங்கே மழை காலத்தில் தண்ணீர் கட்டிக் கொள்கிறது. அதனால் கக்கூஸ் விஷயத்திலும் குடி தண்ணீர் விஷயத்திலும் மலேரியா விஷயத்திலுமகஷ்டங்கள் உண்டாய்க் கொண்டிருக்கின்றன. இப்பொழுது சில காலமாக மலேரியா குறைந்திருக்கிறது. சுகாதார நிலைமை விருத்தியடைந்திருக்கிறது. ஆனாலும் ஒரு நல்ல சுகந்தருவதான கிராமம் என்று சொலவதற்கில்லை. கஸ்தூரிபாய் நிதியின் ஆதரவில் ஏற்படுத்தப்பட்டுள்ள வைத்தியக் கமிட்டியின் காரியதரிசியும் ஸேவா கிராமத்தின் சுகாதார நிலைமையைக் கவனித்து வரும் டாக்டருமாகிய டாக்டர் சுசீலா நய்யார் 18-ம் தேதி தமக்கு யோசனை சொல்லி உதவி செய்யக் கூடிய வைத்திய நண்பர்களை அழைத்து ஒரு கூட்டம் கூட்டினார். அவர்களில் முக்கியமானவர்கள் :

(1) டாக்டர் ஜீவராஜ்மேத்தா. அவருக்குப் பலதரப்பட்ட வேலை இருந்த போதிலும் எப்பொழுதும் ஸேவாக்கிராமத்துக்கு உதவி செய்ய நேரமில்லை என்று சொல்வதில்லை. அவருடன்கூட பம்பாய் சுகதார அதிகாரி டாக்டர் தாஸ் குப்தாவும் பம்பாய் மாகாண மலேரியா நிபுணர் டாக்டர் விஸ்வநாதமும் வந்திருந்தார்கள்.

(2) டாக்டர் ஹாஸாம் மத்திய மாகாண சுகாதார மந்திரி. அவருடன் சில முக்கியமான சுகாதார அதிகாரிகள் வந்திருந்தார்கள். இவர்கள் எல்லோரும் அந்தக் கிராமத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டார்கள்.

மாகாணங்களில் மராமத்து இலாகாவிற்கும் சுகாதார இலாகாவிற்கும் சரியான தொடர்பு கிடையாது. இதுதான் இதுவரை நடந்துவந்த மாகாண சர்க்காரின் போக்கு. இதன் பயனாக ஜில்லா போர்டார் வார்தாவிலிருந்து ஸேவா கிராமத்துக்கு ரோடு போட்டபொழுது ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் வெட்டின பள்ளங்களை பள்ளங்களாகவே போட்டுவிட்டனர். கொஞ்சம் யோசனை செய்திருந்தால் அவைகளை ஒன்றாகச் சேர்த்து கால்வாயாக்கி யிருக்கலாம். அப்பொழுது இரண்டுவிதமான நன்மைகள் கிடைத்திருக்கும். ஆனால் இப்பொழுது அந்தக் குழிகள் தொத்து நோய்களின் உற்பத்தி ஸ்தலங்களாகவே இருந்துவருகின்றன. தண்ணீர் தேங்கி கொசுக்கள் பெருகி வருகின்றன. இவைகள் தவிர தண்ணீர் தேங்கி நிற்கும் குழிகள் அநேகம் இருக்கின்றன. இங்குள்ள பூமி கரிசல் நிலம். மழை நின்று வேனில் வந்ததும் வெடிக்கும் வெடிப்புக்களில் ஜலம் தேங்கி நின்று கொசுக்கள் உண்டாகும். மலேரியா உண்டாகாமல் இருப்பதற்காக டாக்டர்கள் கிராமங்களிலுள்ள வீடுகளில் மலேரியா எண்ணெய் தெளிக்க வேண்டுமென்று சிபார்சு செய்கிறார்கள். குழிகள் நிரப்பும் விஷயத்தை அது சம்பந்தப்பட்ட இலாகா கவனிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

கக்கூஸ்க்காரர்கள் (பங்கிகள்) என்று ஒரு வகுப்பார் இல்லாமலிருக்க வேண்டுமானால் நீர்க் கக்கூஸ் ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழி கிடையாதென்று அவர்கள் கூறுகிறார்கள். திருவிழாக் காலங்கள் போன்ற அவசர சமயங்களில்தான் குழிக் கக்கூஸுகளை ஏற்படுத்தலாமென்றும் மற்றக் காலங்களில் ஏற்படுத்தக்கூடாதென்றும் வற்புறுத்துகிறார்கள். தர்க்க ரீதியாகப் பார்த்தால் குழிக் கக்கூஸு நல்லதாகவே தோன்றுகிறது. ஆனால் அநுபவத்தில் அதனால் ஈ உண்டாகிறது. ஸேவா கிராமத்தைப்போல் தண்ணீர் தேங்குமிடங்களில் அது பயன் படாது. சாணத்தையும் மலத்தையும் மண்ணோடு சேர்த்து உரமாகச் செய்யவேண்டுமென்று யோசனை சொல்கிறார்கள். நல்ல ஜலமில்லாத கிணறுகளை மூடிவிடவேண்டுமென்றும்நல்ல ஜலமுள்ள கிணறுகளைச் சுத்தமாகஇருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் யோசனை கூறுகிறார்கள்.

இந்த யோசனைகளை டாக்டர் ஜீவராஜ்மேத்தா காந்தியடிகளிடம் சமர்ப்பித்தார். காந்தியடிகள் அவர்கள் மேற்கொண்ட சிரமத்திற்காக அவர்கள் எல்லோருக்கும் நன்றிசெலுத்திவிட்டுக் கூறியதாவது :—

''தாங்கள் கூறுவது சரிதான். ஆனால் இந்த விரிவான திட்டங்களுக்கு ஏராளமான பணம்வேண்டுமே, அது சாத்தியப்படுமோ என்று எண்ணுகிறேன். ஸேவா கிராமம் அதைப் பார்த்து மற்ற கிராமங்கள் அமையக்கூடிய விதத்தில் அமைக்கப்படவேண்டும். இந்தியாவிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களில் ஏற்படுத்த முடியாததெதையும் ஸேவா கிராமத்தில் ஏற்படுத்தக் கூடாது. அதை ஞாபகத்தில் வைத்துகொண்டு ஒரு கிராமத்தைச் சுத்தப்படுத்திவிட்டால் அதனால் மற்ற கிராமங்களும் சுத்தமாகிவிடும்.

அப்படிக்கில்லாவிட்டால் முன்னேற்றமானது நத்தை வேகத்தில் தான் உண்டாகும். சிலகிராமங்களில் பிரமாதமாகத் திட்டம்போட்டு வேலைசெய்தால் அது பணத்தை எப்படி வீணாக்கலாம் என்பதை ஞாபகப்படுத்தக்கூடிய சின்னமாக இருக்குமேயன்றி வேறு விதமான பலன் தராது.

அதனால் குழிகளை மூடும் விஷயத்தைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். மருந்து தெளிப்பது ஏற்கனவே நடந்து கொண்டு வருகிறது. அதை அதிகப்படுத்தலாம். சர்க்கார் மலேரியாவைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்பதை அறிய இந்த இடத்தில் சோதனைகள் செய்து பார்க்கலாம். சில நீர்க் கக்கூஸுகள் கட்டலாம். ஆனால் கிராமங்களுக்குக் குழிக் கக்கூசுகள் தான் தக்கமுறையில் உபயோகித்தால் சரியானவை என்று கருதுகிறேன். ஈக்கள் உண்டாகாமலே குழிக் கக்கூஸுகளை உபயோகிக்கமுடியுமா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதாக தாலிமி சங்கத்தைச் சேர்ந்த திரு. அரியநாயகம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்."

**இறுதிவரை**

டாக்டர்கள் ஒன்றும் தோன்றாமல் மாலையில் புறப்பட்டுச் சென்றார்கள். திருத்த முடியாத குற்றவாளி ஒருவரேனும் உள்ளவரை அவரை என் சகோதரராக எண்ணுவதே என் கடமை என்று யூஜீன் டெப்ஸ் என்னும் அறிஞர் கூறியிருக்கிறார் அல்லவா? காந்தியடிகள் ஸேவாகிராமத்திலிருந்து 25-ம் தேதி காலை புறப்பட்டார். அப்பொழுது நடந்த ஒரு சிறு சம்பவம் அவர் மனத்தை நமக்குத் திறந்து காட்டுவதாக இருக்கிறது. ஆசிரமவாசியான ஒருவர் அவருடைய பாதத்தைத் தொட்டு வணங்க விரும்பினார். அப்பொழுது காந்தியடிகள் கூறினதாவது :—

"ஏன் என்னுடைய பாதத்தைத் தொட்டுக் கும்பிட வேண்டும்? கோடிக்கணக்கான மக்கள் அப்படிச் செய்யமுடியுமா? கோடிக்கணக்கான மக்கள்செய்ய முடியாததை நாம் செய்யாமல் விட்டுவிட வேண்டும். அஹிம்ஸையானது கோடிக்கணக்கான மக்களால் அனுஷ்டிக்க முடியாத தர்மமாயிருந்தால் நானும் அதை விட்டுவிடுவேன். அவர்களால் அனுஷ்டிக்க முடியும், ஆனால் அனுஷ்டிக்கப் பிரியமில்லை என்று கூறினால் நான் அதைத் தனியாக அனுஷ்டிக்க வேண்டியிருந்தாலும் விட்டுவிடமாட்டேன். அஹிம்ஸா தர்மத்தை ஞானிகள் தான் அனுஷ்டிக்க முடியும் என்று ஜனங்கள் கூறுகிறார்கள். ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. அவர்கள் கூறுவது உண்மையாயிருந்தால் நான் அதைக் கொஞ்சம் கூட மதிக்கமாட்டேன். அதுபோலவே நான் மட்டுமே தான் 125 வருஷம் உயிருடனிருக்க முடியுமானால் நான் அவ்விதமிருக்க ஆசைப்படமாட்டேன். ஆனால் கடவுளுக்கும் கடவுளுடைய சிருஷ்டிக்கும் ஸேவை செய்வதற்காக 125 வருஷம் ஒவ்வொருவரும் உயிருடனிருக்க முடியும். சுய நலமாகப் பார்த்தால்கூட என்னுடனிருப்பவர்களெல்லாம் இறந்து போன பிறகு நான் மட்டுமிருப்பதால் வாழ்வில் நான் என்ன சுவையை அறிய முடியும்?"

டில்லிக்குப் போகும் ரயிலில் – 25-8-46 – பியாரேலால்

## நயி தலீம் ஸ்தாபனத்தில் மருந்துக்குரிய ஸ்தானம்

ஆஷாதேவி எப்பொழுதும் வேலையில் ஈடுபட்டிருப்பதாலும் என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பாததாலும் அனாவசியமாக என்னிடம் வருவதில்லை. ஆனால் நான் டில்லிக்குப் புறப்படுவதற்கு முந்தின நாள் ஐந்து நிமிஷ நேரம் என்னிடம் வந்து தலீம் சங்கத்திலுள்ள ஆசிரியர்கள் வைத்தியம் கற்றுக் கொள்ளவேண்டியது அவசியம்தானா என்றும் தாம் டாக்டர் ஆவதற்குரிய ஐந்துவருஷப்படிப்புப் படிக்க வேண்டுமா என்றும் கேட்டார்.

பழைய கல்வி முறையின்படி எம். ஏ. பட்டம் பெற்ற ஆஷாதேவி போன்றவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு முயன்றாலும் அந்த முறையின் ஆதிக்கத்திலிருந்து பரிபூர்ணமாக விடுதலை பெறுவது கஷ்டமான காரியம் என்பதை நான் உடனே உணர்ந்து கொண்டேன்.

பெருமை பேசிக் கொள்வதற்குத் தக்க கல்விப் பட்டங்கள் எதுவும் எனக்கு இல்லை. நான் ஹைஸ்கூலில் படித்தபொழுது படித்த சொற்ப அறிவுக்கு மதிப்புக்கொடுக்கும் பழக்கத்தை வெகு காலத்தக்கு முன்

னமே விட்டுவிட்டேன். நான் இயற்கைச் சிகிச்சை முறையில் ஊறிப்போய் இருக்கிறபடியால் நான் கீழ் கண்டவாறு அவரிடம் சொன்னேன் :—

"நம்முடைய குழந்தைகள் கற்றுக்கொள்ள வேண்டிய முதற்பாடம் தங்களையும் தங்கள் சுற்றுப்புறங்களையும் சகல விதத்திலும் சுத்தமாக வைத்துக்கொள்வதே என்று நீர் கூறுகிறீர். இது முதற்பாட மட்டுமன்று இதிலேயே வைத்திய அறிவு முழுவதும் அடங்கும் என்று நான் உமக்குச் சொல்லுகிறேன். நாம் இங்கு கல்வித் திட்டம் வகுத்திருப்பது கோடிக்கணக்கான கிராமவாசிகளின் நன்மைக்காகவே. கிராமவாசிகள் இயற்கையோடு கூடி வாழ்ந்தபோதிலும் இயற்கையின் விதிகளைத் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். கொஞ்சநஞ்சம் தெரிந்தாலும் அதை உபயோகிப்பதில்லை. கிராம வாசிகளின் பரிதாபமான கஷ்டநிலைமையை அறிந்துதான் நாம் இந்தப் புதுக் கல்வித் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இந்தப் புது திட்டத்தை புஸ்தகங்களிலிருந்து அறியமுடியாது. இது வரை நாம் அறிந்துகொண்டதெல்லாம் இயற்கையாகிய புஸ்தகத்திலிருந்துதான். அதுபோல நாம் கிராமத்தாருக்குச் செய்யவேண்டிய வைத்தியத்தையும் இயற்கையிலிருந்துதான் தெரிந்துகொள்ளவேண்டும். சுகாதார விதிகளையும் சரியான போஷணை தரும் உணவு சம்பந்தமான விதிகளையும் கற்றுக்கொண்டு அவற்றை அனுசரித்து நடப்பதே இயற்கைச் சிகிச்சையின் சாராம்சமாகும். இந்த விதமாக ஒவ்வொருவரும் தமக்குத் தாமே டாக்டராகி விடுகிறார்.

உயிர் வாழ்வதற்காக மட்டும் உணவு உண்பவரும் ஐம்பூதங்களுடன் நண்பராய் இருப்பவரும் இவைகளையெல்லாம் சிருஷ்டிக்கும் கடவுளுடைய ஊழியராய் இருப்பவரும் நோயாகவே கூடாது. அவருக்கு நோய் உண்டானால், அவர் கடவுளை நம்பிக்கொண்டு துக்கப்படாமலிருப்பார். இறக்கவேண்டி யிருந்தால் சந்தோஷமாக இறப்பார். தம்முடைய கிராமத்தில் மருந்துப் பச்சிலைகள் கிடைத்தால் அவைகளை உபயோகித்துக்கொள்வார். இந்த விதமாகத்தான் கோடானு கோடி மக்கள் எவ்வித முணுமுணுப்புமின்றி வாழவும்இறக்கவும் செய்கிறார்கள். அவர்கள் காதால்கூட டாக்டரைப் பற்றிக் கேட்டதில்லை. அப்படியிருக்கக் கண்ணால் எப்படி கண்டிருக்கப்போகிறார்கள். அதுவுமில்லை. ஆதலால் நாம் எப்பொழுதும் கிராமத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களாகவே இருக்கவேண்டும். நம்மிடம் வரும் கிராமத்து ஜனங்களுக்கு எப்படி உண்மையாக வாழ்வது என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மனிதனுக்கு உண்டாகும் நோய்களில் 99 சதமானம் சுகாதாரக் குறைவினாலும் தவறான உணவை உண்பதினாலும் போதுமான உணவு உண்ணாததாலுமே உண்டாவதாக டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆதலால் நாம் இந்த 99 சதமான ஜனங்களுக்கு ஆரோக்கியமாக வாழும் வித்தையைக் கற்றுக் கொடுக்கவேண்டுமானால் மீதியுள்ள ஒரு சதமான ஜனங்களை மறந்துவிடலாம். தவறாகாது. அவர்களுக்கு டாக்டர் சுசீலா நய்யார் போன்ற பரோபகார டாக்டர்கள் கிடைப்பார்கள். அவர்களைப்பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. இன்று நாம் சுத்தமான ஜலத்தையும் சுத்தமான மண்ணையும் சுத்தமான காற்றையும் கண்டறியாதவர்களாய் இருக்கிறோம். ஆகாயம் சூரியன் இவற்றின் மதிக்கமுடியாத நன்மையை அறியாமலிருக்கிறோம். ஐம்பூதங்களின் சக்தியைச்சரியான முறையில் உபயோகித்துக் கொள்ளவும் போஷணை உள்ள உணவைச் சரியான முறையில் உண்ணவும் கற்றுக்கொண்டால் ஊழூழி காலம் செய்யக் கூடிய வேலையைச் செய்தவர்களாவோம். இந்த அறிவைப் பெறுவதற்குக் கோடிக்கணக்கான பணம் தேவையில்லை. தேவையானதெல்லாம் கடவுளிடம் அசையாத நம்பிக்கையும் சேவை செய்யவேண்டு மென்ற ஆவலும் ஐம்பூதங்களைப் பற்றியும் உணவு தரும் விதத்தைப் பற்றியும் தெரிந்து கொள்வதும் தான். இதை யெல்லாம் பள்ளிக்கூடங்களில் காலத்தைப் பாழாக்காமல் கற்றுக்கொள்ளமுடியும்.

டில்லிக்குப் போகும் ரயிலில், – 26-8-46 – மோ. க. காந்தி.

## மேகத்திடை மின்னல்

யாருக்கேனும் நன்மை செய்யாத தெதுவும் தீயதே. சமீபத்தில் சில மக்கள் கல்கத்தாவில் தற்காலிகமாக மிருக நிலைக்கு இறங்கி இருந்தார்கள். ஆயினும் அவர்கள் எத்துணை அக்கிரமங்கள் செய்தார்களோ அத்துணை வேறு சில மக்கள் அன்புச் செயல்கள் செய்திருக்கிறார்கள். மனிதனிடம் கடவுள் அம்சம் இருக்குமானால் அவன் இயற்கையில் நல்ல குணமுடையவனே யாவான். ஒரு முஸ்லிம் எழுதும் கீழ் கண்ட கடிதம் மனத்துக்கு தைரிய மளிக்கின்றது :—

"நான் பாலிகஞ்ச் என்னும் இடத்தில் வசிக்கின்றேன். ஆகஸ்ட் 18-ம் தேதி என்னுடைய வீட்டைத் தாக்க வந்தார்கள். ஆனால் என்னுடைய ஹிந்து நண்பர்கள் கூட்டத்தைத் தடுத்து வைத்தார்கள். ஆயினும் மாலையில் அந்தப் பகுதியிலுள்ள படித்த ஹிந்துக்கள் வெறி கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். என் குடும்பத்தில் 35 பேர் இருக்கிறார்கள். அவர்களில் பெண்களும் குழந்தைகளுமே பெரும்பாலோர். வெளியே அக்கிரமிகள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தபடியால் அவர்களைப் பாதுகாவலான இடத்துக்கு அழைத்து கொண்டு போக முடியவில்லை. அதனால் நானும் என் குடும்பத்தாரும் பக்கத்தில் வசித்து வந்த ஹிந்து ஒருவருடைய வீட்டில் போய் தங்கினோம். மற்றொரு ஹிந்து எங்கள் சாமான்களைப் பாதுகாத்துத் தந்தார்.

போக்கிரிகளுக்கு இந்த விஷயம் எப்படியோ தெரிந்து போய் விட்டது. அவர்கள் வந்து எங்கள் நண்பரைப் பயமுறுத்தினார்கள். "வெளியே விரட்டும், உம்மால் அவர்களைக் காப்பாற்ற முடியாது" என்று கூப்பாடு போட்டார்கள்.

அதற்கு அந்த ஹிந்து நண்பர்—"ஆம். என்னால் காப்பாற்ற முடியாது என்பதை அறிவேன். ஆனால் அவர்களை நீங்கள் தொட்டால் நான் என் உயிரைக் கொடுக்க முடியும்" என்று தெளிவாக உரைத்தார்.

முஸ்லிம் லீகைச் சேர்ந்த என்னுடைய நண்பர்களில் சிலர் என்னையும் என்னுடைய குடும்பத்தாரையும் வேறு யிடத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றார்கள். ஆனால் நான் அவர்களுடன் போக மறுத்துவிட்டேன். அந்தப் பகுதியில் வசித்து வந்த மக்கட் பண்புடைய ஹிந்துக்களும் எங்களைப் போகக் கூடாது என்று வற்புறுத்தினார்கள்.

இந்தப் பகுதியில் என்னுடைய சகோதாருக்கு இரண்டு கடைகள் இருக்கின்றன. என்னுடைய சகோதாரும் மருமக்களும், தொண்டர் படையில் சேர்ந்து அக்கிரமிகளை அடக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தச் சமயம் அவருடைய கடைகளை ஹிந்துக்களே காப்பாற்றிக் கொடுத்தார்கள்.

முஸ்லிம்களாகிய எங்களுக்கும் ஹிந்துக்களுக்குமிடையில் வேண்டுமென்று சண்டை மூட்டி விடாதிருந்தால் நாங்கள் இரு மதத்தாரும் சண்டை சச்சரவின்றி சமாதானமாக வாழ முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்"

இந்த விதமாக முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு அபயமளித்துக் காப்பாற்றியதாகவும் செய்திகள் கிடைக்கின்றன. மனித ஜாதியை ஏகமாகப் பிணித்து நிற்கும் மனிதப் பண்பு ஜாதிமத பேதம் எதுவும் அறியாது என்பதை மட்டும் நாம் உணர்ந்து கொண்டோமானால், நாம் மனித வாழ்வை வாழத் தக்கதாகச் செய்து விடுவோம். இன்று தனிப்பட்ட மக்களையும் சமூகங்களையும் மட்டுமின்றி உலகிலுள்ள சகல தேச மக்களையும் மருட்டிக் கொண்டிருப்பதும், துவேஷத்துக்கு ஆணி வேராகவுள்ளதுமான பயம் என்னும் பேயைத் துரத்தி விடுவோம்.

புது டில்லி. — 30-8-46 — அமிர்த கௌரி.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை